BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# பளியர்களின் வாழ்வியல் மாற்றங்கள்

முனைவர் ஜ. ரெஜினா பேகம்
எண்:25, 2வது தளம், நாவலர் தெரு, காரைக்குடி – 630002, தமிழ்நாடு, இந்தியா E.mail:
rejinaj2018@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலகத்தில் சிறந்த இடமாகத் திகழக்கூடிய தாகவும் பலரும் வியந்து பார்க்கத் தக்கனவாகவும் விளங்கும் மலைகளை பிறப்பிடமாகக் கொண்டு வாழும் மக்களே பழங்குடியினர். நம் முன்னோர்கள் பழைய நினைவுகளை அதாவது அவர்கள் பிறந்து வளர்ந்த காலத்தை பற்றி மறப்பதுமில்லை. அக்கால முறைகளை மீறி வாழ்ந்ததுமில்லை. இவர்களைப் போன்றே பழைய காலநிலை மாறாது இன்றும் அக்கால முறைப்படி வாழ்பவர்களின் அறியாமை, தொழில், வாழும் இடங்கள், பிரிவுகள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. அரசின் சில திட்டங்கள் பற்றிய செய்திகளும் பளியரின் நிலையைப் பறைசாற்றுகின்றன.

**திறவுச்சொற்கள்**

பளியரின் வாழ்க்கை, அரசுத்திட்டங்கள், காடுகளில் பழங்குடி மக்களின் வாழ்வியல் தொடர்பான இன்றைய நிலை போன்றவை.

## முன்னுரை

எந்த நாகரிகமடையாமல் தங்களது பண்பாட்டை மீறாமல் பழமையான குடிமரபின் எச்சத்தினையே தங்களின் பண்பாகக் கொண்டு வாழும் மக்களே பழங்குடிகள் எனப் பெறுவர். புழங்குடி என்றால் ஒரு நாட்டில் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்ற பழமையான குடி மக்கள் எனப் பெறுவர். புதியதாக வந்து குடியேறுபவர்கள் வந்தாருங்குடி என அழைக்கப்படுகிறார்கள். பழங்குடிகளுள் ஓரினமாகியப் பளியரைப் பற்றிக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பழங்குடியினர்

பண்டையக் காலத்தில் கொள்ளைக்காரர்களும் சிற்றரசர்களும் இந்தியா மீது போர் தொடுத்ததால் அச்சமுற்ற சில கல்வியறிவில்லாத மக்கள் காடுகளில் சென்று பதுங்கி வாழ ஆரம்பித்தனர். இம்மக்களே நாகரிக மேம்பாட்டால் இன்று காட்டை விட்டு வெளியேறி சிலர் மக்களுடன் வாழ ஆரம்பித்தனர்.பொதுவாக பழங்கடியினர் வடகிழக்கு, மத்திய இந்திய மலைப்பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி என மூன்று பகுதிகளில் உள்ளனர் என்றே கூறலாம். ஆனால் மலைகளைப் பூர்வீக வாழ்விடமாகக் கொண்டவர்கள் மட்டுமே உண்மையான பழங்குடி மக்களாவர். பழங்குடி எனும் சொல்லுக்கு Tribe எனும் ஆங்கிலச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இனக்குழு, மலைவாழ் மக்கள் என பலவாறு தமிழறிஞர்களால் அழைக்கப்படுகின்றனர். *“எல்வின், லூயிஸ் போன்றோர் Tribe எனும் சொல்லை நாகரிகத்தின் பின் தங்கியவர்கள் எனும் பொருளிலேயே பயன்படுத்துகின்றனர்”1* என்பார் அறிஞர் பீ. நசீம்தீன். பழமையின் எச்சங்களை அதிக அளவில் தங்கள் வாழ்வோடு இணைத்துக் கொண்டிருப்பது வியப்பைத் தருகின்றன.

## பளியர்கள்

பளியர் இன மக்கள் கறுப்பு நிறமாகவும், சுருள் முடியும் மூக்குச் சப்பையான தோற்றத்துடனும் காணப்படுவர். இவர்களைக் கண்டு பயந்து இறந்தவர்களுண்டு. இதனால் இவர்கள் பழியர்கள் எனப்பட்டனர். காலப் போக்கில் பழையர், பழியர் என்ற சொற்கள் மருவி பளியர் என்றாயிற்று. இவர்கள் பேசும் மொழி தமிழாகும்.

பளியர்கள் தமிழ்நாட்டில் பழனி மலை, கொடைக்கானல், சிறுமலை, மற்றும் தேனி,

மதுரை, திண்டுக்கல் மாவட்ட மலைக்காடுகளிலும், ராசிமலை, சின்னூர், சவரிக்காடு, கௌரவநாச்சி, பூதமலை, பாலமலை, கடுகுதடிபுதூர், வாழகிரி போன்ற இடங்களில் பளியர்கள் வாழ்கின்றனர். ஆதிபளியர் **"பூலவாடி புளியம்பட்டி"** என்று சொல்லப்படும் இன்றைய பாலாறு அணை தான் தலைக்குடும்பம் வாழ்ந்த இடம் என்பது பளியர் இன மக்களின் கருத்தாகும்.

முந்தைய காலத்தில் பளியர்கள் அளைகளில் வாழ்ந்தனர். அளை என்றால் பொந்து என்று பொருள் . அதாவது பாறை, பொந்து, பரண், குகை, புற்குடிசை ஆகியவற்றில் வாழ்ந்தனர். குறிமரத்தாளை, மஞ்சுகுறித்தாளை, இருட்டோடை அளை, பூதன்கால் வளத்து சோலை போன்ற பல அளைகள் பளியர்களின் வாழ்விடங்களாகும். "பளியர்களது சொற்கள் யாவுமே அறியப்படாத அகராதிச் சொற்களாகவே உள்ளன."



பளியர்கள் தெய்வ நம்பிக்கை அதிகம் கொண்டவர்கள். தெய்வ நடமாட்டம் இல்லாத இடத்தில் தான் குடில் அமைப்பர். இவர்களின் குச்சிக்கு ஆறு தூண்கள் கட்டாயம் இருக்குமாறு கட்டுவர். ஏனெனில் ஒவ்வொரு தூணும் இரண்டு கால்கள் எனக் கூறுவர். கணவன், மனைவி, பிள்ளை என மூன்று பேர்க்கும் ஆறு கால்கள். ஆகவே ஆறு கால் இருந்தால் தான் குலம் தழைக்கும் என நம்புவர். "இந்த கருத்து செட்டியார்களின் வீட்டை நினைவுப்படுத்துகின்னன." குளிக்கப் பயப்படுவர். குளித்தால் சத்து குறையும் என்ற கருத்துடையவர்களாக உளனர். "இக்கருத்து இவர்களின் அறியாமையைக் காட்டுகின்றன."

இவர்கள் இயற்கையை வழிபடுவர். பாறை, கல் மற்றும் பளிச்சியம்மனை வழிபடுவர். இவர்களது வழிபாடு மூன்று நாள் நடைபெறுகின்றது. ஏழு மாத கர்ப்பிணியை ஏழு அடுப்பில் ஏழு வகைச் சமையல் செய்து 'மருத்துவ முத்தியார்' என்ற தெய்வத்தை வழிபடச் சொல்வது வியாக்குடை எனப்படும். குழந்தைப் பிறந்த பிறகு அதிமதுரம், முந்திரிப்பழம் (அ) உலர்ந்த திராட்சை ஊறவைத்த நீரை பஞ்சு பால் எனக் கூறி குழந்தையின் வாயில் தொட்டு வைத்தால் பேச்சு தடுமாற்றம் வராது எனப் பழங்குடியினர் செய்கின்றனர். இதைச் "சாதாரண மக்கள் சுட்ட வசம்பை தடவுவார்கள்." பெரளிக்குடி நோய் வராமலிருக்க இடுப்பில் தகப்பனை கருப்புக் கயிறு கல்லுடன் கற்றச் சொல்வர் . "நாம் கண்ணேறு கழிவதற்காகக் கட்டுவோம்."

**பளியர்களின் பிரிவுகள்**

பளியர்களில் வேடுவப் பளியர், மன்னகப் பளியர், காணிப்பளியர், தெய்வப் பளியர். இடைக்காட்டுப் பளியர். காட்டம் புலையர் (மலசர்) , தேக்கலைப் பளியர் எனப் பல வகைப்படுவர். பளியர்கள் அவரவர் இனத்துக்கேற்ற வேலையைச் செய்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி மனிதனுக்கு அறியாமையை அகற்றும் கருவி. தற்போது பளியர்கள் தான் கற்கா விட்டாலும் தன் பிள்ளைகளை கல்வி கற்க அனுப்புகின்றனர். ஆனால் அவர்கள் தங்களைப் பிறர் மதிப்பதில்லை என்பதை காரணம் காட்டி குறைந்தளவுக் கல்வியேக் கற்கின்றனர். "இக்கருத்தையே பெரியாரும் பார்ப்பனர்கள் கருப்பினத்தவரை தீண்டத்தகாதோர்"எனக் கூறுவதாகத் தெரிவிப்பர். கல்வியின் காரணமாகப் பெண்கள் தற்போது குளித்து நல்ல ஆடை உடுத்துகின்றனர். "இங்கு கல்வியின் சிறப்புச் சுட்டப்பட்டன."முன்பு இலைகள், தழைகள், விலங்குகளின் தோல் ஆகியவற்றை அணிந்தனர். *"கி.மு. 2800ல் மக்கள் மரப்பட்டைகளை உடையாக உடுத்தினர் என்ற கருத்து அரண் செய்யும்"2.* இன்று சேலை, வேட்டி, சுடிதார் அணிகின்றனர். காதுகளில் மரத்தண்டு, பனை ஓலைகளை மாட்டியவர்கள், தற்சமயம் தங்கத்தோடு (தண்டட்டி) போட்டுள்ளனர். கடிகாரம், மோதிரம் அணிகின்றனர் "இன்று அ.னைத்து மக்களிடையே நாகரிகம் வளர்ந்திருப்பதை காண

முடிகிறது. ” இருப்பினும் அதிகக் கல்வி கற்ற ஊராகக் கடுகு தடியதூர், குதிரையாறு அணை, கௌரவநாச்சி ஓடை, கோரன் கொம்பு, செம்பரங்குளம், பூதமலையிலும் அதிகக் கல்வியில்லாத ஊராக கடைசிக்காடு என்ற பல புதுமையான ஊர்களைக் கூறலாம். “பழங்குடியினர்கள் கிராமங்களில் அதிகம் வசிக்கின்றனர் என்பதை இப்பெயர்களால் அறியப்படுகின்றனர்”.

**தொழில்கள்**

பளியர்கள் தேனெடுப்பது, மீன்பிடிப்பது, சீகுமார் (விளக்குமார்) விற்பது, பளிப்பாட்டம், கிழங்கு தோண்டுவது மற்றும் சிறுவன மகசூல், வேட்டைத் தடுப்பு (வனத்துறை), காவற்படை (வனத்துறை) ஆகியத் தொழில்களைச் செய்கின்றனர்.



பளியர்கள் தேனையெடுக்கக் ‘கருங்கொடி’ என்றொரு கொடியைப் பயன்படுத்துவர். மீன், நண்டு பிடிக்க இண்டங்காய், காரங்காய் இரண்டையும் பயன்படுத்துகின்றனர். பளியர்கள் உழைப்பை பளிப் பாட்டம் என்பர். *“பளிப்பாட்டம் என்பது மலைகளை குத்தகைக்கு எடுத்தவர்கள் பளியர்களிடமே முழுப் பொறுப்பாக தேன், பழங்கள் சேகரிப்பது, கடுக்காய், பூந்திக்காய், குங்குலியம் முதலியவற்றை காலை முதல் மாலை வரை சேகரித்து கொடுப்பது. இந்த வேலையே பளிப்பாட்டம் எனப்பட்டது.”3* இவ்வேலையில்லா நாட்களில் கிழங்குகளை தோண்டச் செல்வர். “பிறரை நாடாது உழைப்பை மட்டுமே இவர்கள் பேணுதல் பிறருக்கு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளன. கிடைத்த வேலையைச் செய்தால் வறுமை வாராது.”

**அரசின் திட்டங்கள்**

அமெரிக்கா இந்திய பழங்குடிகளை அமெரிக்க அரசு பழங்குடி அல்ல எனக் கூறியதால் 1900 ஆம் ஆண்டியிலிருந்து தமக்கு பழங்குடித் தகுதி வேண்டுமென்று போராடி வருகின்றனர். இப்போராட்டமே தங்களுக்கு வேண்டிய சலுகைகள், உதவிகள், பாதுகாப்பு பெற உதவும் எனவும் பழங்குடியினர் நம்புகின்றனர். “இதற்குக் காரணம் அரசு தாழ்ந்;த சாதியினருக்கு மட்டுமே பல சலுகைகளை முன் வைப்பது ஆகும் என்பது தனது கருத்தாகும்.”

பளியர்களுக்கு சொந்தமாக வீடு, கழிப்பிடம் கட்டித் தர வேண்டும். சிறுதொழில் தொடங்க கடன் வசதி வேண்டும். வனப்பொருட்களை சேகரிக்க தடை இருக்கக் கூடாது. அனைத்துப் பழங்குடியின மக்களுக்கும் வன உரிமை அட்டைகள் வழங்க வேண்டும். வேட்டைத் தடுப்பு காவற்படையைச் சேர்ந்தவர்களுக்கு வனத்துறையினர் சரியாக சம்பளம் வழங்க வேண்டும். அரசு அனுமதியின்றி விளைந்த பொருட்களை விற்கும் சந்தையை ஏற்படுத்தி தரல் வேண்டும் எனப் பல கோரிக்கைகளை அரசிடம் வைத்தனர்.

காரணம் பழங்குடி மக்கள் வனத்துறையினரை நம்பி தான் வாழ்கிறார்கள். பளியர்களின் தலம் வனம் ஆகும். வுனத்துறையினரை மீறி சுதந்திரமாக எந்தப் பொருளையும் விற்கும் நிலை பளியர்களுக்குக் கிடையாது. மலையில் விளையும் பொருட்கள் ஏலம் விடப்படுவதால் இன்றைய நிலை மிகவும் நலிவடைந்துள்ளதை,

*“காட்டு மூலிகைப் போல் கண்டெடுக்க முடியாமல்*
*ஓட்டைக் குடிசைகளில் உயிர் வாழும் நடைப் பிணங்கள்”4*

என்பார் நா. காமராசன்.

தற்போது பழங்குடிப் பெண்கள் மலையில் ஒருவாரம் தங்கி சீகுமார் அறுத்து வருவர். அவற்றை அரசாங்கம் கூறும் விலையை நிர்ணயித்த பின் சந்தையில் விற்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சிறுவன மகசூல் அதாவது வனங்களில் இருந்து பொருட்களைச் சேகரிக்க 1986 ல் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று தகவலாளர் மார்க்ரேட் குறிப்பிடுகின்றார். மேலும் வனப்பகுதியில் விளைகிற உசிலையரைப்பு, கல்பாசம், சிறுகுறிஞ்சா எனப் பலவகையான சிறுவன மகசூல்களை எடுத்துக் கொள்ள பழங்குடியின மக்களுக்கு அரசு

அனுமதி அளித்துள்ளது. சிலர் விறகுகளை கொடுத்து அரிசி போன்ற உணவுப் பொருளைப் பெறுகின்றனர். “இதைப் போன்று நெய்தல் திணையில் மீனை கொடுத்து உணவுப் பொருளைப் பெறுவர். பொதுவாக பழங்குடியினர் ஐந்திணையை ஒன்றியவர்களாகவெ உள்ளனர். ஏனெனில பச்சிலை, மலை, காடு, தொழில் எனப் பலவற்றை கூறலாம்.”

**முடிவுரை**

புழங்குடி மக்கள் பற்றிய பல செய்திகளை அறிய இக்கட்டுரை பயனாக அமைந்தன. சூதியால் தாழ்ந்தவரென்றாலும் தந்நிலை மாறாது , தனது பழங்கால முறை மாறாது , பிறரை எதிர் பார்க்காது வாழ்கின்றனர். மிகவும் நலிந்த நிலையினும் பிறரிடம் கடன் கேளாது வாழ்வது அரிதாக உளன. குளிக்கப் பயந்தவர்கள் தற்போது கல்வியால் குளித்து, நல்ல ஆடை அணிந்து பிறர் மதிக்க வாழ்வது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. அரசின் சில திட்டங்கள் பளியர்களது வாழ்வில் இன்பத்தை மட்டுமின்றி பாதுகாப்பையும் அளிப்பனவாக உள்ளன. பழங்குடியினர் ஐந்திணையை ஒன்றியவர்களாக இருப்பது வியப்பைத் தருகின்றன.

**துணை நூற்பட்டியல்**

1. .டாக்டர்.பீ..நசீம்தீன், இடுக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல் (ப.9), அன்னம், பிரைவேட் லிட், சிவகங்கை, 1989.
2. .கந்தையாபிள்ளை.நா.சி, தென்னிந்திய குலங்களும் குடிகளும், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1958.
3. ஆ.சிவசுப்பிரமணியன், தமிழ்நாட்டுப் பளியர்கள், ஆராய்ச்சி இதழ் (ப.304), மலர்-3, பாளையங்கோட்டை, 1971-73.
4. காமராசன்.நா, கறுப்பு மலர்கள், அணியகம், சென்னை, 1978.

*****